**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 368/2015**

**நாள்.07.03.2026**

**பி.வா.சா. 1- முருகன்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் புல எண். 142 மற்றும் 144 ல் தனித்தனியாக வீடு கட்டியுள்ளேன் அதற்கு தனித்தனியாக பட்டா வந்துவிட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டாக்கள் புல எண் 142/16 C1B மற்றும் 144/3A5-க்கான 3 வது பிரதிவாதி வேலு பெயரிலான கணிணி பட்டா என்றால் சரிதான். **சாட்சி மேற்படி பட்டாக்களை ஒப்புக்கொண்டிப்பருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.11 ( எண்ணம் - 2) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் பட்டாக்கள் புல எண் 142/16C2 க்கான சப்பாணிமுத்து பெயரிலான கணிணி பட்டா, சர்வே எண் 142/16C1D மற்றும் 142/16C1C -க்கான தவசி, முத்து பெயரிலான கணிணி பட்டாக்கள் என்றால் சரிதான். **சாட்சி மேற்படி பட்டாக்களை ஒப்புக்கொண்டிப்பருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.12 ( எண்ணம் - 3) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது பெயரிலான சர்வே எண் 142 மற்றும் 144 க்கான பட்டாக்களை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா பெரியான் இறக்கும்போது பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், கொஞ்சம் பணத்தையும் வைத்திருந்தார் என்றால் சரியல்ல எந்த சொத்துக்களும் பணமும் கிடையாது நான் தான் அடக்க செலவுகளை செய்தேன். என் அப்பா பெரியான் சேர்த்துவைத்த சொத்துக்களை நான் பொதுக்குடும்பத்தினுடைய வரவுசெலவுகளை பார்த்ததால் நானும், வேலுவும் சேர்ந்து அந்த தொகையை வைத்து வீடு கட்டிக்கொண்டோம் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் எனக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது பொதுக்குடும்ப வருமானம் மட்டும் தான் உண்டு என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும்போது 14.07.1975 ல் தனது சகோதரர் சுப்பிரமணியனிடமிருந்து புல எண் 7 கிரையம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது தந்தை கிரையம் பெற்ற 14.07.1975 தேதியிட்ட ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட கணிணி நகல் என்றால் சரிதான்.

**சாட்சி மேற்படி கிரைய ஆவணத்தை ஒப்புக்கொண்டிப்பருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். புல எண் 7 ல் மற்றொரு பங்கினை 03.10.1994 ல் நான், சப்பாணிமுத்து, வேலு, தவசி ஆகியோர் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். **சாட்சி மேற்படி கிரைய ஆவணத்தை ஒப்புக்கொண்டிப்பருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தின் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான் எனது தகப்பனார் அசல் ஆவணத்தை என்னிடம் ஒப்படைத்தார் அதனால் என்னிடம் உள்ளது. புல எண் 7 ல் என் அப்பா, என் சித்தப்பா ஆகியோர்களுக்கு பங்கு உண்டு என்றால் சங்கரனின் வாரிசுகள் எனது தகப்பனார், கருப்பன், மாடன், சுப்பிரமணியன், பாலன் ஆகியோருக்கு பங்கு உண்டு. நானும் எனது தகப்பனாரும் இதர பங்காளிகளின் பாகத்தை வாங்கிவிட்டோம் என்றால் சரிதான். புல எண்.7 ல் என் அப்பாவிற்கு எவ்வளவு பங்கு என்றால் 60 செண்ட். புல எண் 7 ல் உள்ள 60 செண்ட் என் அப்பாவிற்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் சர்வே எண். 142, 144, 126 ஆகிய புல எண்கள் பிரிக்கப்படாமல் உள்ளது அந்த சொத்துக்களை சேர்க்கவில்லை என கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்படி சர்வே எண்.142, 144, 126 ஆகிய புல எண்கள் சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.126 எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது கிடையாது பொய்யாக மேற்படி சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. புல எண் 7 ல் உள்ள 60 செண்ட் என் அப்பாவிற்கு பூர்வீகமாகப் பாத்தியப்பட்டது என தெரியவந்துவிடும் என்பதால் மேற்படி புல எண் சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் பற்றி தெரியுமா என்றால் தெரியும் என் அப்பா சர்வேயர் மற்றும் VAO வைத்து இடத்தை பாகப்பிரிவினை செய்து பத்திரம் போட வேண்டி வரைந்தார்.

மேற்படி வரைபடம் 3 வது வாதியின் அப்பா சப்பாணிமுத்துவுக்கு என் அப்பாவால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். **<u>சாட்சி மேற்படி மாதிரி வரைபடத்தை ஒப்புக்கொண்டிப்பருப்பதால் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** வா.சா.ஆ.15 மாதிரி வரைபடத்தில் உள்ள விபரங்கள், அளவுகள் எந்த சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புல எண்.7 க்கு தென்பக்கம் புல எண்.8 அதற்கு தென்பக்கம் புல எண்.9 என்றால் சரிதான். புல எண்.8 க்கு மேல்புறம் 1 வது தபசில் சொத்தில் காட்டப்பட்டுள்ள கிணறு உள்ளது என்றால் சரிதான். புல எண்.8 ல் கிணறை ஒட்டி 20 செண்ட் பொது இடமாக இருந்தது என்றால் பொது இடமாக இருந்தது ஆனால் பிரிக்கப்பட்டுவிட்டது. மேற்படி 20 செண்ட் பொது இடம் எப்போது பிரிக்கப்பட்டது என்றால் மற்ற இடங்களை பிரிக்கும்போது சேர்த்து பிரித்துவிட்டோம். 1 வது தபசில் சொத்தில் காட்டப்பட்டுள்ள கிணறை ஒட்டியுள்ள 20 செண்டில் ஆழ்துளைக்கிணறு அமைத்ததால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது ஆழ்துளைக்கிணறு மண் போட்டு மூடப்பட்டு விட்டது என்றால் சரியல்ல தற்போது இருக்கிறது. மேற்படி ஆழ்துளைக்கிணறு பங்காளிகளின் அனுமதி இல்லாமல் போடப்பட்டதால் பயன்படுத்தப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல. 3 வது தபசில் சொத்தில் அரசு அனுமதியில்லாமல் மின் இணைப்பை பயன்படுத்தியதால் என் மீது அபராதம் போடப்பட்டது என்றால் சரியல்ல. புல எண்.8 ல் கிணறை ஒட்டி 20 செண்ட் பொது இடமாக இருந்ததை ஆக்கிரமித்து ஆழ்துளைக்கிணறு அமைத்ததால் அதை அப்புறப்படுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.15 மாதிரி வரைபடத்தில் உள்ள அளவுகள்படி நான் ஆக்கிரமித்து ஆழ்துளைக்கிணறு அமைத்திருந்தால் அதை அகற்றிக்கொடுக்க தயாராக இருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.15 மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்ட அளவுகள்படி தான் நான், பி.வா.சா.ஆ.2 மற்றும் 7 ஆவணங்களை பிறப்பித்தேன் என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ல் 11 வது அயிட்ட சொத்து விபரத்தில் கிணற்றில் 5 ல் 1-1/2 பங்கு, கிணற்றில் உள்ள மின் மோட்டாரில் பாதிப்பங்கு என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதைத் தவிர கிணற்றில் உள்ள மின் இணைப்பு, கிணற்று தண்ணீர், கமலைக்குழி, பத்தல்நடை, வாய்க்கால் வழி நடைபாத்தியமும் சேர்த்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பங்கு கிணற்றில் உள்ள பங்கு தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 லும் மேற்படி விபரங்கள் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் ஏற்படுத்திய பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலமாக வாதிகளுக்கு 1, 2 தபசில் சொத்துக்களில் உள்ள உரிமையை ஒப்புக்கொண்டதால் அதை மறுத்து கட்சி செய்ய முரண்தடை கோட்பாட்டால் தடை செய்யப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் அத்துமீறி 3 வது தபசில் சொத்தில் ஆழ்துளைக்கிணறு அமைத்து வாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தி, பிராது 1, 2 தபசில் சொத்துக்களில் வாதிகளின் உரிமையை தடுத்து வந்ததால் இந்த வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:56:34 +0530